3rd March 1961]

சொன்னால், அவரவர்களுடைய நிலங்களைச் சேர்த்து ஒன்றாக அமைப்பது என்பது பொருள். ஆகவே அந்தவிதமாக ஸ்தாபனத்தை அமைத்து வருகின்றபோது, இப்படி நிலத்தை எடுத்துக் கொள்வதற்கான அத்தியாவசியமே ஏற்படாது. டெனண்ட் பார்மிங் சொஸைடி அமைப்பது என்பது தான் நம்முடைய பிரச்னையாக இருக்கிறது. அதையும் கடந்த இரண்டு ஆண்டுகளாக நாம் ஏராளமாகச் செய்து வந்திருக்கிறோம். தஞ்சை ஜில்லாவில் 67 கூட்டுறவு டெனண்ட் பார்மிங் சொஸைடிகள் ஏற்படுத்தப்பட்டு, நடத்தப்பட்டு வருகின்றன.

SRI S. M. ANNAMALAI : மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் ஏற்படுத்தப்போகும் கூட்டுறவுப் பண்ணைகளில் 'ஜாயிண்டு பார்மிங் சொஸைடீஸ்' எத்தனை, 'டெனண்ட் பார்மிங் சொஸைடீஸ்' எத்தனை என்று சொல்ல முடியுமா? அவைகளை மேலும் மேலும் ஊக்குவிக்க சர்க்கார் நடவடிக்கை எடுப்பார்களா? சர்க்கார் இதில் அதிக கவனம் செலுத்தவில்லை என்று சொல்லப்படுகிறதே, அது உண்மையா?

THE HON. SRI R. VENKATARAMAN : 'ஜாயிண்டு பார்மிங் சொஸைடீஸ்' எவ்வளவு, 'டெனண்டு பார்மிங் சொஸைடீஸ்' எவ்வளவு என்று இப்பொழுது பிரித்துச் சொல்ல முடியாது. ஏனென்றால் எல்லாம் கோவாப்பரேடிவ் பார்மிங்கின் கீழ் வரும். எந்த முறையில் கோவாப்பரேடிவ் பார்மிங் நடத்த முன்வருகிறார்களோ, அதன்படி இதை நாம் செய்வதற்குத் தயாராக இருக்கிறோம். அதில் சர்க்காருக்கு ஊக்கம் இல்லை என்று சொன்னால், அதை ஒரு 'கிரிடிஸிஸமாக' 'பட்ஜெட் ஸ்பீச்சில்' சொல்லலாம். அதற்குப் பதில் கிடைக்கும்.

Roads (Kanyakumari district)

* 552 *Q*.—SRI T. T. DANIEL : Will the Hon. the Minister for Works be pleased to state—

(*a*) the amount allotted in the Second Five-Year Plan for the formation of new roads in the Kanyakumari district;

(*b*) whether the whole amount has been spent; and

(*c*) if not, the reasons thereof?

THE HON. SRI P. KAKKAN : (*a*) A provision of Rs. 10.49 lakhs was made in the Second Five-Year Plan for formation of new roads in Kanyakumari district against which schemes costing Rs. 9·11 lakhs have bkeen sanctioned. The budget allotment so far made for these schemes is Rs. 4·56 lakhs.

(*b*) Only Rs. 1.83 lakhs has been spent.

(*c*) The short-fall is due to difficulties encountered in tho acquisition of lands for New Formation Works. In view of this, the Government have permitted the Chief Engineer to take up six blacktop works costing Rs. 6·38 lakhs in order to spend the budget allotment in full. The remaining New Formation works will be taken up after completion of land acquisition proceedings.